# கீழைத்தேய சங்கீதம்

## பாடத்திட்டம்

# தரம் 12/13

(2017ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படவுள்ளது)

அழகியற்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
www.nie.lk

# பொருளடக்கம்


| | | பக்கம் இலக்கம் |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | i |
| 2.0 | தேசிய இலக்குகள் | ii |
| 3.0 | அடிப்படைத் தேர்ச்சிகள் | iii-v |
| 4.0 | கீழைத்தேய சங்கீத பாடத்திற்கான பொதுவான தேர்ச்சிகள | vi |
| 5.0 | தேசிய இலக்குகள் மற்றும் பாடத்திட்ட நோக்கம் என்பவற்றின் தொடர்பு | vii |
| 6.0 | தரம் 12 பாடத்திட்டம் | 1-18 |
| 7.0 | கணிப்பீடும் மதிப்பீடும் | 19 |
| 8.0 | பாடசாலைக் கொள்கையும் நிகழ்ச்சித் திட்டமும். | 20 |
| 9.0 | பாடத்திட்ட திட்ட வளவாளர் குழு | 21 |

# 1.0 அறிமுகம்

புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைய தேர்ச்சியை மையமாகக் கொண்ட கலைத்திட்டமானது 2016ஆம் ஆண்டிலிருந்து தரம் 12 இற்கு அமுலாக்கப்படுகின்றது. இப்பாடத்திட்டமானது 9 பிரதான தேர்ச்சிகளை அறிமுகப்படுத்துவதுடன், இத்தேர்ச்சிகள் கீழைத்தேய சங்கீதத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவரிடம் விருத்தி செய்து கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர், தரம் 13 இற்குரிய அடிப்படைத் தேர்ச்சி மட்டங்களை அடைந்துகொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இவற்றுடன் கலைத்திட்டச் சீர்திருத்தமானது இப் புதிய நூற்றாண்டில் மாணவர்கள் தாம் தெரிந்தவற்றை மறைத்து வைப்பதற்குப் பதிலாக அவற்றை வெளிக்காட்டுவதற்கும் இருக்கின்றதை மீள வெளிப்படுத்துவதற்கும் அவர்களை வழிநடத்த அவசியமாவதுடன் எதிர்காலத் தேவைகளுக்காகக் கட்டியெழுப்புவதற்கும் அத்தியாவசியமாகவுள்ளது.
இந் நோக்கமானது தேர்ச்சி மையக் கலைத்திட்டம் மற்றும் செயற்பாட்டு மையக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள் மூலம் மேலும் விருத்தி செய்யப்படலாம்.

இப்புதிய பாடத்திட்டமானது கீழைத்தேய சங்கீதச் செய்முறைப் பரீட்சைச் சபையிடமிருந்து பெற்றுக்கொண்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டும் விசேடமாக விருத்திசெய்து கொள்ளப்பட வேண்டிய பாடப்பரப்புக்கள் சம்பந்தமாகத் தேசிய மட்டப் பரீட்சையாளர்களின் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டும் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பாடத்திட்டத்தை ஒழுங்கமைக்கும் போது மாகாணமட்ட கற்றல் வட்டங்கள், பாடத்திட்டத்தை அமுலாக்கும் முகமாகப் பாடசாலைகளை அவதானித்துப் பெறப்பட்ட ஆய்வறிக்கைகள், வலய மட்டத்தில் நடைபெற்ற பரீட்சைகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் புலமையாளர்களின் அபிப்பிராயம், அரச பாதுகாப்பு அமைச்சின் பாண்ட் வாத்தியக் குழுவின் கருத்து, இசையில் புலமை பெற்றவர்களின் எண்ணங்கள், இலத்திரனியல் ஊடகங்களில் ஒலிபரப்பப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் நிகழ்ச்சிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் பாடசாலையில் கீழைத்தேய சங்கீதத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் விருப்புக்கள் போன்றவற்றில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சங்கீதத்தை அழகியற் கல்வியின் கீழ் கற்பதன் மூலம் மாணவர் பாடசாலை நாட்களில் மட்டுமன்றி அவர்கள் பாடசாலையில் இருந்து விலகிய நாள்களிலும் அவசியப்படும் உள் உணர்வுகளை மற்றும் வாழ்க்கைத் தேர்ச்சிகளை விருத்தி செய்யலாம். சாஸ்திரிய இசையை ஒரு பாடமாகக் கற்பிப்பதன் பிரதான நோக்கம் உயர்ந்த திறமையுடைய முழுமையான கலைஞரை உருவாக்குவதைப் பிரதானமாக எதிர்பார்க்காவிட்டாலும் வாழ்க்கைக்குத் தேவையான உணர்ச்சியும் இரசிக்கும் திறனுமுடைய, பல்வேறுபட்ட இசைப் பாரம்பரியங்களின் அனுபவங்களைச் சாதாரண வாழ்க்கையிற் பயன்படுத்தி உயர்ந்த ஒரு திருப்தியும் இரசனையுமுடைய பிரஜையை உருவாக்குவதாகும்.

இப் பாடத்திட்டத்தைப் பின்பற்றுவதன் மூலம் மாணவரை நவீன உலகிற்கேற்றவாறு திறமைவாய்ந்த முழுமையடைந்த ஒரு ஆரோக்கியமான நபராக உருவாக்கித் தருவதற்கும் இசைக்கருவிகளை வடிவமைத்தல், இசை உருவாக்கங்கள் மற்றும் இசைத் தொழினுட்பம் போன்றவற்றில் திறமையை வளர்த்து விடுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# 2.0 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும், குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

i.. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

ii.. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

iii.. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

vi. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

v.. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

vi.. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்குக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

vii..தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

viii..நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

# 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

(I) தொடர்பாடற் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவற் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையிலான கருத்துப் பரிமாற்றம் |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல் |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும் |
| தகவற் தொழினுட்பத் தகைமை: (கணினி அறிவு) | கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல். |

(II) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

(III) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு (சமூகம், உயிரியல், பௌதிகம்) தொடர்புறுகின்றன.

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையிற் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

உயிரியற் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழற் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

IV). வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

- அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

(V) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

(VI).ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

(VII) ''கற்றலுக்குக் கற்றல்'' தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

# 4.0 கீழைத்தேய சங்கீத பாடத்திற்கான பொதுவான தேர்ச்சிகள்

1.0 பாடுதல் மற்றும் இசைத்தலில் செய்முறைத் திறன்களைக் காண்பிப்பார். இசையின் அடிப்படைகளை, நுட்பங்களை மற்றும் கோட்பாடுகளை இனங்காண்பார்.

2.0 இசைக்கருவிகளை இசைப்பதற்கான திறனையும் அதனை அறிந்து கொள்ளும் திறனையும் காண்பிப்பார்.

3.0 இசையை நயப்பதன் மூலம் மகிழ்ச்சிகரமான வாழ்வினைப் பேணக்கூடிய மனநிலையைப் பெறுவார்.

4.0 சுதேசிய கிராமிய இசை அடிப்படை செய்முறைத் திறன்களை வளர்ப்பதன் மூலம் கலாசார பாரம்பரியங்களைப் பாதுகாப்பார்.

5.0 சாஸ்திரீயம் அல்லாத இசையுடன் தொடர்புடைய இசை அடிப்படைகளின் அனுபவத்தைப் பெறுவார்.

6.0 நாடகப் பாரம்பரியத்தின் சிறப்பம்சங்களைக் கற்பதன் மூலம் இசைசார் சிறப்பியல்வுகளின் செய்முறை அனுபவத்தினைப் பெறுவார்.

7.0 இசையின் ஆக்கத்திறன் செயற்பாடுகளை ஆராய்வார்.

8.0 இசையைக் குறியீடாகப் பதிவு செய்யும் முறையை இனங்காண்பதன் மூலம் உலகளாவிய இசைச் செயற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளை வளர்ப்பதுடன் சுதேசிய இசையின் அடிப்படைகளை உலகிற்கு எடுத்துச் செல்வார்.

9.0 தொழினுட்ப சாதனங்களை மற்றும் இசையின் பௌதிக, உயிரியல் மற்றும் உளவியல் அடிப்படைகளைக் கற்பதுடன் மேலும் வெற்றியளிக்கக்கூடிய ஆற்றுகைத் திறன்களை வழங்குவார்.

10. இணையம் ஊடாகக் கணினியானது எவ்வாறு இசையைக் கற்க, பாதுகாக்க மற்றும் உருவாக்கப் பயன்படுகின்றது என்பதைச் செய்முறை ரீதியாக இனங்காண்பார்.

11. நவீன வியாபார உலகத்திற்கு ஏற்ற இசைக்கருவிகளின் உற்பத்தியை ஊக்குவிப்பார்.

## 5.0 தேசிய இலக்குகள் மற்றும் பாடத்திட்ட நோக்கம் என்பவற்றின் தொடர்பு

| தேசிய இலக்குகள் | கீழைத்தேய சங்கீத பாடத்திற்கான பொதுவான தேர்ச்சிகள் |
|---|---|
| i.. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும். | 3. இசையை நயப்பதன் மூலம் மகிழ்ச்சிகரமான வாழ்வினைப் பேணக்கூடிய மனநிலையைப் பெறுவார்.<br>5. சாஸ்திரீயம் அல்லாத இசையுடன் தொடர்புடைய இசை அடிப்படைகளின் அனுபவத்தைப் பெறுவார். |
| ii.. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும். | 2 இசைக்கருவிகளை இசைப்பதற்கான திறனையும் அதனை அறிந்து கொள்ளும் திறனையும் காண்பிப்பார். |
| iii.. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும். | 6 நாடகப் பாரம்பரியத்தின் சிறப்பம்சங்களைக் கற்பதன் மூலம் இசைசார் சிறப்பியல்வுகளின் செய்முறை அனுபவத்தினைப் பெறுவார்.<br>4 சுதேசிய கிராமிய இசை அடிப்படை செய்முறைத் திறன்களை வளர்ப்பதன் மூலம் கலாசார பாரம்பரியங்களைப் பாதுகாப்பார். |
| vi. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல் | 4. சுதேசிய கிராமிய இசை அடிப்படை செய்முறைத் திறன்களை வளர்ப்பதன் மூலம் கலாசார பாரம்பரியங்களைப் பாதுகாப்பார். |
| v.. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல். | 1. பாடுதல் மற்றும் இசைத்தலில் செய்முறைத் திறன்களைக் காண்பிப்பார். இசையின் அடிப்படைகளை, நுட்பங்களை மற்றும் கோட்பாடுகளை இனங்காண்பார். |
| vi.. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்குக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல். | 11. நவீன வியாபார உலகத்திற்கு ஏற்ற இசைக்கருவிகளின் உற்பத்தியை ஊக்குவிப்பார். |
| vii.. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல். | 9. தொழினுட்ப சாதனங்களை மற்றும் இசையின் பௌதிக, உயிரியல் மற்றும் உளவியல் அடிப்படைகளைக் கற்பதுடன் மேலும் வெற்றியளிக்கக்கூடிய ஆற்றுகைத் திறன்களை வழங்குவார்.<br>10. இணையம் ஊடாகக் கணினியானது எவ்வாறு இசையைக் கற்க, பாதுகாக்க மற்றும் உருவாக்கப் பயன்படுகின்றது என்பதைச் செய்முறை ரீதியாக இனங்காண்பார். |
| viii.. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல். | 7. இசையின் ஆக்கத்திறன் செயற்பாடுகளை ஆராய்வார்.<br>8. இசையைக் குறியீடாகப் பதிவு செய்யும் முறையை இனங்காண்பதன் மூலம் உலகளாவிய இசைச் செயற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளை வளர்ப்பதுடன் சுதேசிய இசையின் அடிப்படைகளை உலகிற்கு எடுத்துச் செல்வார். |

# 6.0 தரம் 12 பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 பாடுதல் மற்றும்<br>இசைத்தலில்<br>செய்முறைத்<br>திறன்களைக்<br>காண்பிப்பார்.<br>இசையின்<br>அடிப்படைகளை,<br>நுட்பங்களை<br>மற்றும்<br>கோட்பாடுகளை<br>இனங்காண்பார். | 1.1. உயர்தரத்தில்<br>பாடல்களை பாட<br>மற்றும் இசைக்கக்<br>கூடிய திறன்களை<br>விருத்தி செய்வதற்காக<br>ராகதாரி இசையின்<br>அடிப்படைத்<br>தன்மைகளை<br>செய்முறை<br>மூலகமாகக் கற்பார் | • உச்ச மற்றும் தாழ் ஸ்தாயிகளில் பாடுவதற்கான பயிற்சிகள்<br>• பாடும்பொழுது உடலின் நிலை (நுரையீரல், தொண்டை, முகம்) மற்றும் அபிநயத்திற்குரிய பயிற்சிகள் | • ராகதாரி இசையைக் கற்பதற்குத் தேவையான அடிப்படைத் திறன்களை வளர்த்துக் கொள்வார்<br>• ராகதாரிப் பாடல்களை பாடுவதில் ஊக்கத்தினைக் காண்பிப்பார் | 10<br><br>29 |
| | 1.2 வட இந்திய இசைக்கு<br>உரித்தான<br>ராகங்களைப் பாடுதல்,<br>இசைத்தல் மற்றும்<br>அவற்றிற்கிடையிலான<br>ஒற்றுமை<br>வேற்றுமைகளை<br>அறிந்து கொள்வார் | • பாகேஸ்சிறி, தேஷ் மற்றும் ஆசாவரி ராகங்களின் சாகம் மற்றும் மத்திய லய தாளப் பாடல்களைப் பாடல்<br>• தேஷ், திலக்காமோட், பைரவகாலிங்கடா, ஆஷாவறி ஜவ்ன பூரி ராகங்களின் தோற்றம், விவரம் மற்றும் அவற்றின் ஸ்வரங்களை விசேட ஸ்வர இணைப்பின் மூலம் செய்முறை ரீதியாக வெளிக்காட்டல் | • குறிப்பிடப்பட்ட ராகங்களின் சிறப்பியல்வுகளை மற்றும் கோட்பாடுகளைக் கற்பதன் மூலம் செய்முறைத் திறன்களை வளர்த்துக் கொள்வார் | 54 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 1.3 சாஸ்திரீய இசையில் உயர்த் திறனை வெளிப்படுத்துவதற்கு அவசியமான திறன்களை வெளிப்படுத்துவார் | • விதந்துரைக்கப்பட்ட ராகங்களின் விவரங்கள்<br>• கயனசமய மற்றும் முக்யான்கே | • தாள பதத்தினை பயன்படுத்தி வட இந்திய ராகதாரி இசையின் திறன்களை செய்முறை மூலம் பெற்றுக் கொள்வார். | 12 |
| | | • ஆலபங்கள் மற்றும் ஆலப வகை | | 02 |
| | | • பல்வேறுபட்ட ஸ்வர அமைப்பு | • வட இந்திய ராகதாரி இசையின் நுட்பங்களை, செய்முறை திறன்களின் ஊடாகப் பெற்றுக் கொள்வார் | 02 |
| | | • மீன்ட், கமக், கன், மூர்கி, உபஜ், ஜலா, மூக்கடா, திஷாய் | | 02 |
| | | • விதந்துரைக்கப்பட்ட ராகங்களை ஸ்வர இணைப்பின் ஊடாக செய்முறை மூலம் வேறுபடுத்துதல்<br>• ராக விஸ்தர மற்றும் ஆலாபனைகளின் பகுதிகள் | | 08 |
| | 1.4 தாள வகையினை விபரிப்பார். சுதேச மற்றும் இந்திய தாள வகைகளை இனங்கண்டு விபரிப்பார் | • விதந்துரைக்கப்பட்ட ராகங்களின் வேறுபட்ட தாளலயங்கள்<br>• தாள கோட்பாடுகள்(கதி, மிதி, லய மற்றும் தாளபத பகுதிகள்) | • வட இந்திய இசையின் தாள ஒழுங்கமைப்பின் கோட்பாடுகளை வேறுபடுத்திக் கொள்வதுடன் விதந்துரைக்கப்பட்ட தாளலயங்களைச் செய்முறை மூலம் அறிந்து கொள்வார் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | • திரித்தள், ஜதபள், தீப்சந்தி மற்றும் ததற பயிற்சிகள் மற்றும் சமகுன தெகுன<br>• அவனாதக்சசர தாள திரித்தள்<br>• ஜதபள், தீப்சந்தி மற்றும் ததற தபேலாவில் அடித்தல்<br>• சுதேசிய தித் தாள முறைமையின் கட்டமைப்பு தெதித்த இற்குரிய தித் றூப தாள அமைப்பைச் செய்முறை ஊடாக விபரித்தல் | • தெய்தித்த தாள அமைப்பினைச் செய்முறை மூலம் செய்து காட்டுவார். அவற்றின் அடிப்படைக் கட்டமைப்பை ஆராய்வார் | 04<br>04<br>04 |
| 2.0 பல்வேறுபட்ட உலகளாவிய இசையை அதன் தன்மையை விளங்கிக் கொள்வதன் மூலம் விபரிப்பார் | 2.1 இசையின் பொதுத் தன்மைகள் மற்றும் வேறுபாடுகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவார் | • பல்வேறுபட்ட வரைவிலக்கணங்களைக் கொண்டு இசையை விபரித்தல்<br>• உலகளாவிய இசையின் வேறுபாடுகள் மற்றும் அவற்றிற்கான காரணிகள் (மொழி, காலநிலை, புவியியல் காரணிகள்)<br>• உலக இசையின் வேறுபட்ட ஒழுங்கு முறை (கீழைத்தேய இசை மற்றும் மேலைத்தேய இசையின் முறைமை) | • இசையானது உலகளாவிய பொதுக்கலையாகக் காணப்படுகின்ற போதிலும் பல்வேறுபட்ட காரணிகளால் வேறுபடுகின்றது என்பதை ஆராய்வார் | 02<br>02<br>02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 2.2 இந்திய இசையின் வித்தியாசமான பாணிகளையும் அவற்றின் வேறுபாடுகளையும் பற்றிக் கற்றுக் கொள்ள ஊக்குவிக்கப்படுவார் | • இந்திய இசையின் தன்மை<br>• வட இந்திய மற்றும் தென்னிந்திய இசைகளுக்கிடையிலான ஒற்றுமை வேற்றுமைகள்<br>• வட இந்திய பாடல்களைப் பாடும் முறைமை தொடர்பான அடிப்படைகள் (துறுபத், தமார், சதுரங்க)<br>• கதல், பஜன், கசல் தொடர்பான தர்க்க ரீதியான ஒப்பீடு<br>• மல்கவ்ன் ராக பாடும் பாணி | • இந்திய இசையின் தன்மை பழமையான பாடும் முறைமை அதன் பாணிகளை செய்முறை ரீதியாக வெளிக் காட்டுவார் | 02<br>02<br>04<br>12<br>02<br>04 |
| 3.0 இசைக்கருவிகளை இசைப்பதற்கான திறனையும் அதனை அறிந்து கொள்ளும் திறனையும் காண்பிப்பார். | 3.1 இசைக் கருவிகளை இசைப்பதில் திறமையைக் காண்பிப்பார் | • அனைத்து மாணவர்களும் கீபோட் இசைக்கருவியை இசைப்பார்கள் (உயர் தரத்தில் இசைத்தலைக் காண்பிப்பர்)<br>• சரள கீ மற்றும் ராகதாரி இசையை இசைப்பார்கள் தபேலா (காயத, பல்ரா, முக்கடா)<br>• இசைக்கருவியின் பகுதிகளையும் அமைப்பையும் இசைக்கும் முறைமையையும் அறிந்து கொள்வார் | • கீபோட் இசைக்கருவியை இசைக்கும் திறனை காண்பிப்பார்.<br>• இசைக்கருவியின் சுருதி சேர்க்கும் பகுதிகளை அறிந்து கொள்வார். | 12<br>12<br>2 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | • இசைக்கருவிகளைத் தனியாகச் சுருதியைப் பேண பயிலுதல்<br>• விதந்துரைக்கப்பட்ட சகல பயிற்சிகளையும் வினைப்புடன் பயிலுதல் | | |
| 4.0 இசையை நயப்பதன் மூலம் மகிழ்ச்சிகரமான வாழ்வினைப் பேணக்கூடிய மனநிலையைப் பெறுவார். | 4.1 ராகதாரி இசையை அடிப்படையாகக் கொண்ட பாடல்களைப் பாட ஊக்குவிக்கப்படுவார் | • ஆசிரியரின் உதவியுடன் ராகதாரி இசையயைத் தழுவிய இந்தி மற்றும் சிங்கள மெல்லிசை மற்றும் திரைப்படப் பாடல்களைப் பாட ஊக்குவித்தல் | • சாஸ்திரீய இசை அடிப்படையிலான சிங்கள மற்றும் இந்திப் பாடல்களைப் பாட மற்றும் இசைக்கக் கூடியதாக இருப்பார் | 06 |
| 5.0 சுதேசிய கிராமிய இசையின் அடிப்படைகளின் செய்முறைத் திறன்களை வளர்ப்பதன் மூலம் கலாசார பாரம்பரியங் களைப் பாதுகாத்தல். | 5.1 கிராமியப் பாடல்களைப் பாடுவதற்கான மற்றும் இசைப்பதற்கான திறனை வளர்ப்பதுடன் அவற்றினைப் பற்றி தர்க்க ரீதியாக அறிந்து கொள்வார் | • இலங்கை கிராமிய பாடல்கள் பற்றிய தகவல்கள்<br>• வேதாந்தப் பாடல்கள்<br>• மலைநாடு, தாழ் நாடு மற்றும் சப்பிரகமுவ கிராமியப் பாடல்களின் வேறுபாடுகள் (கிரிகைகளுடன் சம்பந்தபட்ட பாடல்களின் மூலம்)<br>• அனாகாதாமக மெகே பாடல் (பத்தல் பாடல் பமற சீகா சீபத) மேகே பாடல் (நெலும், ஓசே | . | 02<br>02<br>04<br>06<br>03 |

04

04

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 6.0 இசை வரலாறு தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வார் | 6.1 இலங்கை இசையின் வரலாற்றினைக் கற்பார் | கயன, வரம் பாடல்)<br>• கண்டிய இராச்சிய காலகட்டத்தில் இலங்கை இசையின் வளர்ச்சி (அரச அனுசரணை, அரச மாளிகையுடன் இசைத் தொடர்பினைப் பேணிய அமைப்புக்கள், கவிக்காரமதுவ, கர்நாடக இசையின் செல்வாக்கு)<br>• இலங்கையின் இசைக்கல்வியில் 50ம் 60ம் தசாப்பதங்களில் ஈடுபாடு கொண்ட இசைக் கலைஞர்களின் கல்வி வெளியீடுகள்<br>கான வித்யா எம். ஜி. பெரேரா சங்கீத பிரேமவம்ச கப்புவலானா பெரதீக சங்கீத சாஸ்திரீய பி. எஸ். விஜேரத்தன<br>பாவிக்க கீத வின்செண்ட் சோமபால<br>கியால கீத ஆனந்த ஜயசிங்க<br>கமினாரக எதிர்வீர சரச்சந்திர ஹெல கீ மகா டபுள்யு. பி. மகுலொகுவ, சங்கீத சமபவய | • கண்டிய இராச்சிய காலகட்டத்தில் இலங்கை இசையின் பரிமான வளர்ச்சியினை ஆராய்வார்<br>• இசை தொடர்பான சிங்கள மொழியில் எழுதப்பட்ட புத்தகங்களை வாசிக்க ஊக்குவிக்கப்படுவார். | 10<br>04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
| --- | --- | --- | --- | --- |
| 7.0 பிரயோக இசை மற்றும் அரங்கற் கலை தொடர்பான இசையில் தேர்ச்சி பெறுவார் | 7.1 இலங்கையின் சம்பிரதாய இசை ஆற்றுகை தொடர்பான தகவல்களைப் பெறுவதுடன் பாடல்களைப் பாட மற்றும் இசைக்க ஊக்குவிக்கப்படுவார் | சி.டி.எஸ். குலதிலக<br>• சொக்கரி, கோளம், நூர்த்தி, நாடகம் தொடர்பான<br>• ஆற்றுகைப் பாணிகள் | • இலங்கை ஆற்றுகைச் சம்பிரதாயங்கள் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வார் | 04 |
| | | மேற்கூறிய ஆற்றுகை தொடர்பான பாடல்களைப் பாரம்பரிய முறைப்படி பாடுதல் மற்றும் இசைத்தல்<br>• நாடகத்தின் இசை வடிவம் (பல்வேறுபட்ட மெட்டுக்கள், தாள லயங்கள் மற்றும் இசைக் கருவிகள்) | • நாடக ஆற்றுகை தொடர்பான பாரம்பரியத்தின் சிறப்பியல்வுகளை செய்முறை ரீதியாக காண்பிப்பார் | 08 |
| | | தோடயம, இன்னிசய, பொதே சிந்துவ மற்றும் உறுற்றுவ பாடல்கள்<br>• ராகதாரி பின்னணியை கொண்ட பாடல்களை அறிதல் | • நூர்த்தி இசையில் ராகதாரி பின்னணியை விபரிப்பார் | 04 |
| | | தொகொறவ மற்றும் வதித்த (கத்) பாடல் | | 04 |
| | | • வயலினை சுருதி சேர்க்கும் பல்வகை முறைமைகள் | • பிரயோக இசையில் வயலினை பயன்படுத்தும் முறைமையை அறிந்து கொள்வார் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 8.0 இசைத் தொகுப்புக்களைப் படைப்பதில் அனுபவத்தைப் பெறுவார் | 8.1 தாளலயம், தாளம், மற்றும் வேகம் என்பன குறியீட்டினை உருவாக்குவதில் முக்கியத்துவமானது என்பதைத் தர்க ரீதியாக அறிவார்<br>8.2 பல்வேறு மட்டத்தைச் சேர்ந்த ஒலிகளானது எவ்வாறு கலைத்துவப் படைப்பிற்கு முக்கியத்துவமானது என்பதை அறிந்து கொள்வார் | • சுருதி, ஸ்வரங்கள், ஸ்வர எல்லை மற்றும் ஸ்வர வரிசை எவ்வாறு முக்கியத்துவமானது<br>• இசைக் கருவிகள் எவ்வாறு இசையை எழுப்புகின்றன<br>• வயலின் மற்றும் பிறாஸ் (பித்தளை) இசைக்கருவிகள்<br>• | • பல்வேறுபட்ட ஸ்வரங்கள், குறிகள் எவ்வாறு இசையமைப்பில் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை அறிவார்<br>• இசைக்கருவிகளின் வகைகளை அவற்றின் ஒலி எழுப்பும் முறைமைக்கு அமைவாக வேறுபடுத்தி அறிவார் | 04<br>01<br>10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 9.0 இசையைக் குறியீடாகப் பதிவு செய்யும் முறையை இனங்காண்பதன் மூலம் உலகளாவிய இசைச் செயற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளை வளாப்பதுடன் சுதேசிய இசையின் அடிப்படைகளை உலகிற்கு எடுத்துச் செல்வார். | 9.1 பல்வேறுபட்ட குறியீடுகளைப் பயன்படுத்தி இசைக் குறியீடுகளை எழுதுவார். | • Bb மற்றும் Eb மேஜர் ஸ்வரங்களை மேலைத்தேய குறியீட்டில் எழுதுதல் (கேமடள நிசாத்தய மற்றும் கோமளகாந்தாரய)<br>• F மற்றும் G மேஜர் ஸ்வரங்களை மேலைத்தேய குறியீட்டில் எழுதுதல் | | 04 |
| 10.0 இசையுடன் தொடர்புடைய பௌதீக காரணிகளை அறிந்து கொள்வதன் மூலம் வெற்றிகரமான ஆற்றுகைத் திறனை வழங்குவார் | 10.1 இசை தொடர்பான நவீன தொழில்நுட்பக் கருவிகளை இசை உருவாக்கத்திற்குப் பயன்படுத்துவார். அவற்றைப் பயன்படுத்தும் முறைமையைக் கற்றுக் கொள்வார் | • இசையமைப்பில் ஒலியமைப்பில் கணினியின் பயன்கள் மற்றும் அதற்குரிய கருவிகள்<br>• கணினி அறிமுகம்<br>• சாதாரண கணினி பாகங்கள் மற்றும் வெளி இணைப்புக்கள் | • இசையமைப்பதில் கணினியைப் பயன்படுத்துவதுடன் இசையைக் கற்பதில் இணையத்தைப் பயன்படுத்திக் கொள்வார் | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | • வன்பொருள் (சவுன்ட்காட், மிடி கீபோட், மிடி கேபிள், இசை மென்பொருள்)<br>• இசையை ஒலிப்பதிவு செய்தல், இசையை உருவாக்குதல், பதிப்பித்தல் மற்றும் வெளியிடுதல் | | 10 |
| | | • இணையத்தை இசைக் கல்விக்காகப் பயன்படுத்துதல்<br>• பல்வேறுபட்ட இணையத் தளங்களைக் கொண்டு இசையைக் கற்றல் | | 10 |
| | | மதிப்பீடு<br>. | | 37 |

# தரம் 13 பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 பாடுதல் மற்றும் இசைத்தலில் செய்முறைத் திறன்களைக் காண்பிப்பார். இசையின் அடிப்படைகளை, நுட்பங்களை மற்றும் கோட்பாடுகளை இனங்காண்பார். | 1.1. வட இந்திய இசைக்குரிய பல்வேறுபட்ட ராகங்களின் தன்மைகளை இனங்காண்பதுடன் அவற்றை நுட்பத்துடன் பாடுவார் மற்றும் இசைப்பார். | • ஜயஜயவந்தி, பைரவ, ஹன்சத்துவனி ராகங்களின் சாகம்<br>• மேற்கூறிய ராகங்களின் சுரங்களை, கமகங்களுடன் பயிற்சி செய்தல்<br>• மேற்கூறிய ராகங்களில் அமைந்த மத்திய லய தாள பாடல்களை ப் பாடல் பூர்வாலாப்பஸ் மற்றும் படத் ஆலாப்ஸ்<br>• வேறுபட்ட தானலங்கரக்களில் பாடுதல் மற்றும் இசைத்தல் | • ராகதாரி பாடல்களைப் பாடுவார் மற்றும் அதன் நுட்பத் திறன்களைக் காண்பிப்பார்<br><br>• மேற்கூறிய ராகங்களின் பிரத்தியேக தன்மைகளைக் கற்பதன் மூலம் செய்முறைத் திறன்களை விருத்தி செய்வார் | 12<br><br>30<br><br>12 |
| | 1.2 ராகங்களின் ஒத்த தன்மையைச் செய்முறை மூலம் விபரிப்பார்.<br><br>1.3 விலம்பலய கதல் பாடல்களை விசேட நுட்பத்துடன் பாடி மற்றும் இசைத்து வெளிக்காட்டுவார் | • பைரவ மற்றும் கலிங்கத ராகங்களின் ஒத்த தன்மையை விரிவாக்கப்பட்ட சுரங்களினால் செய்முறை மூலம் விபரிப்பார்<br><br>• பஹெஸ்ரி, தெஷ், ஆஷாவரி, ஜயஜயவந்தி மற்றும் பைரவா ராகங்களின் எதாவது ஒன்றிற்குரிய விலம்பலய பாடல் பூர்வலப்ப, மத்தலப்ப, போலப்ப மற்றும் தானங்லங்கர உடன். | • ஒத்ததன்மையான ராகங்களின் ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளைச் செய்முறை மூலம் காட்டுவார்<br><br>• விலம்பலய கதல் பாடல்களை விசேட நுட்பங்களுடன் பாடி மற்றும் இசைத்துக் காண்பிப்பார் | 08<br><br>14 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 1.4 ஒன்றுடனொன்றை ஒப்பிடுவதன் மூலம் விலம்பலயவுடன் தொடர்புபட்ட தாள பதய இனை செய்முறை மூலம் பயில்வார் | • ஏக்தால், திலவட இனை இனங்காண்பதற்கான பயிற்சி மற்றும் சமகுன இனை விபரித்தல்<br>• மேற்கூறிய தாள பதங்களை அவற்றின் மற்றைய சமாந்தர தாள பதங்களுடன் ஒப்பிடுதல்<br>• எக்தல், திரித்தால் இனை தபேலாவினைக் கொண்டு விபரித்தல் | • தாள பதத்தினைப் பயன்படுத்தி வட இந்திய ராகதாரி இசையின் திறன்களை செய்முறை மூலம் பெற்றுக் கொள்வார். | 10<br>08<br>04 |
| 2.0 பல்வேறுபட்ட உலகளாவிய இசையை அதன் தன்மையை விளங்கிக் கொள்வதன் மூலம் விபரிப்பார் | 2.1 மேலைத்தேய இசையின் இசைத் தொகுப்புக்களை விபரிப்பதுடன் அவற்றிற்குப் பங்காற்றிய இசைக் கலைஞர்களின் தகவல்களையும் கற்பார் | • பீத்தோவன், மொசாட் மற்றும் பாஹ் இசைக் கலைஞர்களின் வாழ்க்கைச் சரிதையைக் கற்பதுடன் சிம்பொனி, பலற் மற்றும் ஒபேராக்களின் சிறப்பியல்வுகளைக் கற்றல்<br>• இசைத் தொகுப்புக்களை செவிமடுத்து நயத்தல். | • மேலைத்தேய இசைக் கலைஞர்களையும் அவற்றின் படைப்புக்களையும் பற்றி அறிந்து கொள்வார். | 08<br>04<br>04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 3.0 இசைக்கருவிகளை இசைப்பதற்கான திறனையும் அதனை அறிந்து கொள்ளும் திறனையும் காண்பிப்பார். | 3.1 மேலைத்தேய இசைக் கருவிகளின் தன்மையை அறிந்து கொள்வதுடன் அவற்றை வகைப்படுத்துவார். | • பாடசாலையில் பயன்படுத்தும் தந்தி, காற்று மற்றும் தாள இசைக் கருவிகளின் அடிப்படைகளை அறிந்து கொள்ளல் | • மேலைத்தேய சங்கீத இசைக் கருவிகளை இனங்கண்டு வகைப்படுத்துவார். | 10 |
| 4.0 இசையை நயப்பதன் மூலம் மகிழ்ச்சிகரமான வாழ்வினைப் பேணக்கூடிய மனநிலையைப் பெறுவார். | 4.1 சாஸ்திரிய இசைக் கலைஞர்களைப் பற்றி அறிந்து கொள்வதுடன் அவர்களின் இசைப் படைப்புக்களை நயப்பார். | • கசல் வகைப் பாடல் (உசாத் பங்காஜ் உதாஸ், ஜக்கித் சிங்)<br>• கசல் வகைப் பாடல் பங்கஜ் உஸ்தாத் ஜக்ஜித் சிங் (உஸ்தாத் அமீர் கான், உஸ்தாத் படேகுலாம் அலிகான், பர்வீன் சுல்தானா, பாண்டித் ஜஸ்ராஜ் சிங்)<br>• தபேலா இசைப்பதைக் கற்றல் (உசாத் அல்லா றஹான், உசாத் ஷகீர் ஹுசைன்)<br>• சித்தார், எஸ்ராஜ், சந்தூர், புல்லாங்குழல், வயலின் மற்றும் ஷெனாய் இசைக் கருவிகள் மீட்டுதலை ஊக்குவித்தல் | • வட இந்திய இசைக் கலைஞரின் படைப்புக்களை நயப்பதுடன் ஊக்கத்துடன் கற்பார். அவர்களின் பாடல்களைப் பாடுவார் மற்றும் இசைப்பார் | 08<br>08<br>04<br>04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 5.0 சுதேசிய கிராமிய இசையின் அடிப்படைகளின் செய்முறைத் திறன்களை வளர்ப்பதன் மூலம் கலாசார பாரம்பரியங் களைப் பாதுகாத்தல். | 5.1 சே கீ பாடல்களை பாடுவதற்கான திறன்களை காண்பிப்பார் | • முத்ரபதய உடன் பிரசாஸ்தி.<br>• ஹற்ரன் காவ்ய உடன் இரண்டு தாளரூபாக்கள்<br>• செவுலா வண்ணம் மற்றும் அதன் தாளரூப விசேடத்துவம்<br>• கணபதி சவுதம் | • நாட்டார் பாடல்களை நயந்து அவற்றினைப் பாட மற்றும் இசைக்க ஊக்குவித்தல். | 02<br>02<br>02<br>04 |
| 6.0 இசை வரலாறு தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வார் | 6.1 இந்திய இசையின் தோற்றம் மற்றும் பரிணாமம் தொடர்பான தகவல்களைக் கற்பார் | • வேதம் சார்ந்த பாடல்கள் எவ்வாறு இசையை தோற்றுவித்தது<br>• வட இந்திய இசையின் பரிணாமத்தில் குல மரபு சார்ந்த பாடல்களின் செல்வாக்கு.<br>• வட இந்திய இசையின் பரிணாமத்தில் கவிதையின் செல்வாக்கு.<br>• வட இந்திய இசையின் பரிணாமத்தில் இசைக் கலைஞரின் செல்வாக்கு. | • இந்திய இசையின் வளர்ச்சி மற்றும் பரிணாமத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய காரணிகளை ஆராய்தல்<br>• பல்வேறுபட்ட இந்திய இசைக் கலைஞர்களை மதிப்பிடல் | 04<br>04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | • இசைத் துறையில் சரங்கதேவ, அமீர் குஷ்னு, பஹத்ஹந்த மற்றும் பேராசிரியர் நைகம் போன்றோரின் பங்களிப்பு | • வேறுபாடுகளை இசை அடிப்படையில் செய்முறை ரீதியாக வேறுபடுத்தி விபரிப்பார் | 04 |
| 7.0 பிரயோக இசை மற்றும் அரங்கக் கலை தொடர்பான இசையில் தேர்ச்சி பெறுவார் | | • வேறுபட்ட காலப்பகுதிகளில் இலங்கை சினிமா இசையில் ஏற்பட்ட மாற்றங்கள் (ஆரம்ப காலப்பகுதியில் தென்னிந்தியச் செல்வாக்கு, றேக்காவா திரைப்பட இசை, சஸ்சமுற இசை)<br>• மேற்குறிப்பிட்ட திரைப்படங்களின் இசைப் படைப்புக்கள் மற்றும் அவற்றின் இசையமைப்பாளர்கள் பற்றிச் சுருக்கமான கலந்துரையாடல்<br>• ஆசிரியரினால் தெரிவு செய்யப்பட்ட திரைப்படப் பாடல்களைப் பாடுவார்/ இசைப்பா. | • இலங்கை திரைப்பட இசையின் மறுமலர்ச்சியை ஆராய்வார்<br>• திரைப்படப் பாடல்களை நயந்து பாடுவார்<br>. | 08<br>06<br>04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | ஒலு நெலும் - றேக்காவா<br>கொவ்லன் கந்தாய்-மத்தளன்<br>கறேகிரி சுவந்த- சந்தேஷய<br>கலன கங்ககி - றன்முத்துதுவ<br>சினிது சுது முது- சத் சமுத்ரா<br>உடும்பற - பம்பறு எவித்<br>கமலஷனி -ஹித்தக பிப்புன மல்<br>குட கமே - குளவளி<br>உந்மாத சித்துவம்-ஏகரென் கீ<br>குமுகுமுவ - விசிதெல | | |
| 8.0 இசைத் தொகுப்புக்களைப் படைப்பதில் அனுபவத்தைப் பெறுவார் | 5.2 சறள கீ பாடல்களின் உள்ளடக்கங்களை ஆராய்வதுடன் குறிப்பிட்ட பகுதிகளுடன் பாடல்களை உருவாக்குவார் | • முன்னிசையும் இடையிசையும்<br>• மெட்டுக்களைக் கொண்டு இசைத்துணுக்கு (பிற்ஸ்), வெவ்வேறு திசையில் செல்லும் இசை (கௌன்ர பொய்ன்ற்) ஒத்திசை (கோட்ஸ்) மற்றும் கலைஞரின் விருப்பத்திற்கேற்றவாறு இசைத்தல் (அட் லிப்) போன்றவற்றை விளங்கிக் கொள்வார்.<br>• மேற்கூறிய பகுதிகளைக் கொண்டு பாடல்களை அமைத்தல் | • சறள கீ களின் பகுதிகளைக் கொண்டு புதிய படைப்புக்களை உருவாக்குவார்<br><br>• கணினி மூலம் இசை ஒலிப்பதிவு செய்வதற்கான முறையைப் பரிசோதிப்பார். | 04<br>10<br><br>04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 8.2 பாடசாலையில் கிடைக்கக் கூடிய புத்தளிப்பு இசைக் கருவிகளைப் பயன்படுத்தி இசைக்கக் கூடிய இசையினைப் படைப்பார் | • குழுவாகச் சேர்ந்து இசைக்கக் கூடிய இசையைப் படைத்தல் | • குழுவாக இசைத்தல்/ பாடுவதற்குரிய இசையை உருவாக்குவார் | 10 |
| 9.0 இசையைக் குறியீடாகப் பதிவு செய்யும் முறையை இனங்காண்பதன் மூலம் உலகளாவிய இசைச் செயற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளை வளாப்பதுடன் சுதேசிய இசையின் அடிப்படைகளை உலகிற்கு எடுத்துச் செல்வார். | 9.1 பல்வேறுபட்ட குறியீடுகளைப் பயன்படுத்தி இசைக் குறியீடுகளை எழுதுவார். | • மேலைத்தேய சங்கீத இசைக் குறிப்பில் பயன்படுத்தப்படும் குறியீடுகள். (f,ff,p,pp, ஸ்லேர்,ஸ்ரக்காற்ரோ, லெகாற்ரோ, பிசிகாற்ரோ)<br><br>• இலகுவான குறியீடுகளைப் பயன்படுத்தி மேற்குறிப்பிடப்பட்ட பதங்களைப் பயிற்சி செய்தல்<br>• நவீன மக்கள் அபிமானம் பெற்ற இசையைக் குறியீட்டு முறைமையைப் பயன்படுத்தி செயன்முறை மூலம் பயிற்சி பெறுவார் | • மேலைத்தேய சங்கீத இசைக் குறிப்பில் பயன்படுத்தப்படும் குறியீடுகளை இனங்காண்பார்<br><br>• நவீன பிரயோக இசைக்குத் தேவையான இசைக்குறியீட்டு நுட்பங்களைப் பயன்படுத்துவார் | 02<br><br>04<br><br>04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 10.0 இசையுடன் தொடர்புடைய பௌதீக காரணிகளை அறிந்து கொள்வதன் மூலம் வெற்றிகரமான ஆற்றுகைத் திறனை வழங்குவார் | 10.1 இசைச் சுரங்களின் பௌதீக நிலைமைகளை அறிந்துகொள்வதன் மூலம் சுரங்களை ஒத்திசைவாக்க கூடியவராக இருப்பார்<br><br>10.2 இசை தொடர்பான விஞ்ஞான அறிவை வளர்த்துக் கொள்வார் | • சுரங்களை ஹார்மோனைஸ் செய்வதற்கும் மற்றும் எங்வாறு கோட்ஸ் உருவாகின்றது என அறிவார்.<br><br>• நாம் எவ்வாறு இசை ஒலியை கேட்கின்றோம்<br>• பாடும்போது குரல்வளையின் செயற்பாடுகள்<br><br>• குரல் வளத்தைப் பாதிக்கும் காரணிகள் | • ஒரு சுரத்துடன் இன்னுமொரு சுரம் எவ்வாறு ஒத்திசைவாகும் முறைமையை அறிவார்<br><br>• இசையைக் கற்பதில் காதும், குரள்வளையும் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை விஞ்ஞான ரீதியில் விபரிப்பார். | 10<br><br>10<br><br>10 |
| 11.0 இசையுடன் தொடர்புடைய அடிப்படை உளவியலைக் கற்பதன் மூலம் வெற்றிகரமான வாழ்க்கையை மேற்கொள்வார் | 11.1 இசையுடன் தொடர்பான உளவியலைக் கற்று வெற்றிகரமான வாழ்க்கையை மேற்கொள்வார் | • விவேகம் மற்றும் இசைக்கு இடையிலான தொடர்புகள் (ஹாவாட் காடினரின் பல்வகை விவேகக் கோட்பாடு) | • விவேகம் மற்றும் இசைக்கு இடையிலான தொடர்புகளை ஆராய்வார் | 10 |

# 7.0 கணிப்பீடும் மதிப்பீடும்

கீழைத்தேய சங்கீதப் பாடத்தின் கணிப்பீடும் மதிப்பீடும் வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது மேற்கொள்ளப்படுகின்றது. பொருத்தமான முறைமையைப் பயன்படுத்தி மாணவர்களின் உரிய செயற்பாடுகள் மதிப்பிடப்பட வேண்டும். இவ்வேளையில் மாணவர்களின் திறமைகளை இனங்கண்டு அவற்றினை வளர்க்க உரிய ஊக்கத்தினை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் வழங்கக் கூடியதாகவுள்ளது. குழுவாக மாணவர்கள் செயற்படும் போது கணிப்பீட்டை மேற்கொள்ளவும் மற்றும் அவர்கள் தங்களது கண்டுபிடிப்புக்களை வெளிப்படுத்தும்போது மற்றும் கருத்துக்களை விபரிக்கும் போது மதிப்பீட்டையும் மேற்கொள்ள முடியும்.

ஆசிரியர் மாணவர்களை அவர்களின் செயற்பாடுகளின் போது உன்னிப்பாக அவதானிப்பதன் மூலம் தேவையான ஆகக் குறைந்த தேர்ச்சிமட்ட நிலைக்காவது இட்டுச் செல்வதுடன் அவர்களின் திறமைகள் மற்றும் இயலாமைகள் போன்றவற்றை இனங்காண வேண்டும். இச் செயற்பாடானது கணிப்பீடு எனக் கூறப்படுகின்றது. மதிப்பீடானது மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை கொண்டும் அவர்கள் தமது கண்டுபிடிப்புக்களை எடுத்துரைக்கும் போது அவர்களின் பெறுபேறுகளை பகுப்பாய்வதன் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றது.

அதனடிப்படையில் எக்குழு முதலில் தமது கண்டுபிடிப்புக்களை முழு வகுப்பிற்கும் முன்பாக குழுவாக எடுத்துரைக்கின்றனவோ அதன் போது முதலாவது கணிப்பீட்டுச் செயற்பாடு இடம்பெறுகின்றது. அவர்களின் முயற்சி சரிசெய்யப்பட்டு, மெருகூட்டி அவற்றின் கருத்துக்கள் இரண்டாவது கணிப்பீட்டுப் பகுதியாகக் கருதப்படுகின்றது.

# 8.0 பாடசாலைக் கொள்கையும் நிகழ்ச்சித் திட்டமும்

மாணவரின் திறனாய்வு சார்ந்த சிந்திக்கும் திறனை வளர்ப்பதற்குக் கணிதம் மற்றும் விஞ்ஞானப் பாடங்கள் அவசியமாகின்றது. அதே போன்றே அழகியற் கலைப் பாடங்களை கற்பித்தலானது மாணவரின் ரசிப்புத் தன்மையை மற்றும் ஆக்கத்திறனை வளர்ப்பதற்கு அத்தியாவசியமாகின்றது. மாணவரின் செயன்முறைத் திறன்களை விருத்தி செய்வதற்கும், சமநிலையான ஆளுமையை வளர்ப்பதன் மூலம் சிறந்த மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ளவும் சங்கீதப் பாடத்தின் மூலம் விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. பாடத்திட்டதில் உள்ள பாட விடயங்களுடன் மேற்கூறப்பட்ட செயற்பாடுகளை ஒன்றினைப்பதன் மூலம் மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகளின் மூலம் அவற்றினைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்கினாலும் வகுப்பறை கற்றலின் மூலம் அனுபவத்தை பெற முடியாதுள்ளது. ஆகவே இந்நிலையை கருத்திற் கொண்டு மாணவர்களை கீழ்க்குறிப்பிட்ட இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபடச்செயய்வதன் மூலம் அவர்களை செயன்முறையில் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள முக்கியத்துவம் பெறுகின்றது.

1. பாட்டுப் போட்டி மற்றும் இசைக்கருவிகளை இசைக்கும் போட்டி
2. பொது நிகழ்ச்சிகளில் பாடுதல் மற்றும் இசைக்கருவிகளை இசைத்தல்
3. சிறுவர் நாடகப் போட்டி
4. வகுப்பறை மட்டத்தில் கவின்கலைக் கழகங்களை உருவாக்குதல்
5. வகுப்பறை மட்ட சிறிய கலை நிகழ்ச்சிகள்
6. வருடாந்த பாடசாலைக் கலைவிழாக்கள்
7. படைப்பாற்றில் செயற்பாடுகளின் மூலம் புத்தாக்க இசைக் கருவிகளை உருவாக்கல்
8. பக்திப் பாடல் நிகழ்ச்சிகள்
9. கணனித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி படைப்புக்களை உருவாக்கல்
10. காலை ஒன்று கூடலில் பாடுதல் மற்றும் இசைக் கருவிகளை இசைத்தல்
11. பாடசாலைச் சுற்றுப் புறத்தில் விசேட இசை நிகழ்ச்சிகள்
12. அரச விழாக்களில் பாடுதல் மற்றும் இசைத்தல் தொடர்பான நிகழ்வுகள்
13. பாடசாலை பாண்ட் வாத்தியக் குழு

மேற்கூறிய செயற்பாடுகள் பாடத்திட்டத்துடன் இணைந்து குறித்த அனுபவத்தினை மாணவர்கள் பெற வழியமைக்கின்றது. ஆகவே இதன் மூலம் மாணவர்கள் தமது அன்றாட கற்றல் செயற்பாடுகளுக்கு அத்தியாவசியமான உள்ளம் மற்றும் உடல் சார்ந்த தகுதியைப் வளர்க்கக் கூடியதாக இருப்பார்கள்

## 9.0 பாடத்திட்ட திட்ட வளவாளர் குழு

***உள்ளக வளவாளர்கள்***

| | |
|---|---|
| *சுகத் சமரசிங்க* | *பணிப்பாளர், அழகியற் கல்விப் பிரிவு* |
| *ஜனாகி பதிரனகே* | *சிரேஷ்ட விரிவுரையாளர்*<br>*அழகியற் கல்விப் பிரிவு* |

***வெளியக வளவாளர்கள்***

| | |
|---|---|
| *டப்ளியூ.வி.ஜீ.விதானகே* | *பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)*<br>*வலயக் கல்வி அலுவலகம் , இரத்தினபுரி* |
| *கபில மெத்தேகொட* | *நிலைய முகாமையாளர்*<br>*வளவாளர் அலுவகம் - மீகொட* |
| *கே.கே.எஸ்.ஜயவிக்ரம* | *உதவி பணிப்பாளர் நாயகம்*<br>*வலயக் கல்வி அலுவலகம் - பிலியந்தல* |
| *ஆர்.டி.பெரேரா* | *ஆசிரிய ஆலோசகர்*<br>*வலயக் கல்வி அலுவலகம் - கண்டி* |
| *ஈ.ஏ.பிரேமசிரி* | *ஆசிரிய ஆலோசகர்*<br>*கோட்ட கல்வி அலுவலகம் - களுத்துறை* |
| *ரஞ்சித் பிரியந்த சில்வா* | *ஆசிரிய சேவை*<br>*வொகொவ்வ கனிஷ்ட வித்தியாலயம், மினுவாங்கொட* |

***மொழிபெயர்ப்பு***

| | |
|---|---|
| *எல். பி. அன்ரன் டயஸ்* | *வருகைதரு விரிவுரையாளர்*<br>*கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் - கொழும்பு.* |

***மீள்பார்வை***

| | |
|---|---|
| *த. முத்துக்குமாரசாமி* | *இளைப்பாறிய அதிபர்*<br>*கொ/இந்துக் கல்லூரி கொழும்பு 04* |